மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சிறுதொழில் மூலமாக பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்த இரண்டு ஆண்டுகாலங்களிலே செய்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, அரசு தனிப்பட்ட முறையிலே அதைச் செய்வது கிடையாது. கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற மாவட்டங்களில்கூட, அங்கே அதிக அளவாக 1,05,000 மெட்ரிக் டன் மா விளைச்சல் உள்ளது. குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே 3,20,000 மெட்ரிக் டன் உற்பத்தி இருக்கிறது. அங்கே, 52 தனியார் ஆலைகளைத் துவக்கி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிறுவனங்களிலேயே பாதி நிறுவனங்கள் செயல்படமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதிக்கு ஆலை வேண்டுமென்று, தொகுதியினுடைய முன்னேற்றத்திற்காக பாடுபடக்கூடிய உறுப்பினர் அவர்கள் வேண்டுகோளாக வைத்திருப்பதற்கிணங்க, அங்கே தொழிலைச் செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதுபற்றி பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 413, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

413—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***20748—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், ஊத்துப்பட்டியிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

2013 மே 7]

திட்ட மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து மாவட்டங்களிலும் எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றனவோ அவையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயங்கவேண்டுமென்று ஆணையிட்டு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். அதன் அடிப்படையிலே, 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து சொந்தக் கட்டடங்கள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையிலே, சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை வட்டாரம், ரெட்டியபட்டி ஊராட்சி, ஊத்துப்பட்டி அங்கன்வாடி மையம் 1982 முதல் வாடகையில்லாத கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியரின் நிருவாக அனுமதியைப் பெற்று, சொந்தக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நலன் மறந்து குடும்ப நலன் ஒன்றே தனது இலட்சியம் என வாழ்ந்துகொண்டிருக்கின்ற சுயநலத் தலைவரின் முழு ஒப்புதலோடு, இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத் தீவினையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் மீட்டெடுத்து, தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டிட பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தி வருவதோடு, இந்த மாமன்றத்திலே வரலாற்று முக்கியத்துவம்

வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றி, காவு கொடுக்கப்பட்ட கச்சத் தீவை காப்பாற்றிட வெற்றிக் களம் அமைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்களின் வயிற்றில் பால் வார்த்திட்ட, நாளைய பாரத தேசம், வாழும் மனித தெய்வம், அம்மா அவர்களை வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட, வெம்பக்கோட்டை ஒன்றியம், ஊத்துப்பட்டியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிட கோரிக்கை வைத்து, இந்த மாமன்றத்திற்கு அவ்வினா வருவதற்கு முன்பாகவே நிறைவேற்றித் தந்து வரலாறு வாழ்த்துகின்ற வகையில், வளரும் இளம் தலைமுறையினரின் வளர்ச்சிக்காக முத்து முத்தான திட்டங்களை வாரி, வாரி வழங்கி வருகின்ற, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சாத்தூர் தொகுதி மக்களின் சார்பிலும் எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 414, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

414—

புதிய கட்டடம்

***24754—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி, திருவெண்காடு மற்றும் எருக்கூர் ஆகிய பகுதிகளிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?